பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை 05.12.2023 கதிர் 389

# வடக்கு கிழக்கு தமிழ் எம்.பிக்கள் சொல்வது மக்களின் கருத்தல்ல: அரசியல் பிழைப்பு

## நாடாளுமன்றில் நீதி அமைச்சர் காட்டம்

வடக்கில் உள்ள தமிழ் மக்கள் இன்னமும் சமாதானத்தையே கேட்கின்றனர். நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்களின் கருத்து தமிழ் மக்களின் கருத்துக்களேஅல்ல. இவர்கள் அரசியல்பிழைப்புக்காகஉழைக்கிறார்கள்.

நாட்டில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சிக்கும்போது, சிலநாடாளுமன்றஉறுப்பினர்கள் இனவாதத்தைத் தூண்ட முயற்சிக்கின்றனர் என்று நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக் ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், நேற்றையதினம் நீதி அமைச்சு தொடர்பில் விசேட அறிக்கையொன்றைஆற்றியபோதே ☞ 2

# இது ரகசியம் அல்ல!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் அனேகமாக ஒவ்வொரு நாளும் உரையாற்றுகின்றார். நாடாளுமன்றத்தில் எந்த உரையையும் ஆற்றாமலேயே காலம்கடத்துபவர்கள்மத்தியில்இவர் நாளாந்தம்ஏதாவதுஒருவிடயத்தைக் கொண்டு உரையாற்றுகின்றார். இது ஆளும் தரப்பினருக்குப் பெரும் தலையிடியாக மாறியிருக்கிறது.

சஜித்தின் நாளாந்த உரையை நிறுத்தவேண்டும் என்று ஆளும் தரப்பினர் கடும் முயற்சிகளைச் செய்கிறார்கள். ஆனால், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளைப் பயன்படுத்தியே சஜித் உரையாற்றுகின்றார் என்பதால் அவர்களால் ☞ 2

# பார்வையற்றோருக்கு தனி வாக்குச் சீட்டு

## தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை

எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் கட்புலனற்றோருக்கான விசேட வாக்குச் சீட்டுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர்நாயகம்சமன்ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கட்புலனற்றோருக்கான அனைத்து வாக்களிப்பு ☞ 2

# பொலிஸ் நிலையத்தின் அருகிலேயே நேற்று மாலை வாள்வெட்டு தாக்குதல்

## துரத்திச் சென்ற பொலிஸார் துப்பாக்கிச் சூடு

தெல்லிப்பழை பகுதியில் ஹயஸ் வானில் வந்தஇனந்தெரியாதகுழு மோட்டார்சைக்கிள்வந்த இளைஞரை மறித்து சரமாரியாக வாள்களால் வெட்டியுள்ளது. வன்முறைக்கும்பலைத்துரத்திச் சென்ற பொலிஸார் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்றும் எனினும் குற்றவாகிளகள் தப்பிச்சென்றுவிட்டனர்.

நேற்று மாலை 5.30 மணிக்குஇந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் இளைஞர்கள் சிலர் தெல்லிப்பழை பகுதியில் பயணித்துள்ளனர். அப்போது ஹயஸ் வானில்வந்தவாள்வெட்டு குழுவினரை பார்த்து மோட்டார் சைக்கிளில் வந்த ஏனையவர்கள் தப்பித்து செல்ல ஒருவர் மீது சரமாரியாக வாள் வெட்டுதாக்குதலைநடாத்திவிட்டு கும்பல் மருதனார்மடம் நோக்கி தப்பிச் சென்றுள்ளது.

இந்தத் தாக்குதலை பொலிஸ் நிலையம் முன்பாக காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும்பார்த்தனர். உடனடியாக மோட்டார் சைக்கிளில் வாள்வெட்டு குழுவை துரத்தி சென்ற போதும்ஹயஸ்வானில் குறித்த குழு தப்பிச் சென்றுள்ளது.

ஹயஸ் வானை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் தெரிய வருகிறது. சம்பவத்தில் காயம டைந்த இளைஞர்தெல்லிப்பழைஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# கிரிக்கெட்டின் பின்னடைவுக்கு தீர்வு காண புதிய சட்டமூலம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார அறிவிப்பு

கிரிக்கெட் விளையாட்டில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்குத் தீர்வு வழங்கும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டமூலம் தயாரிக்கப்படும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விளையாட்டுத்துறை அமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் ஆளும்கட்சியில்இருந்து விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்;.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நீண்டகால வேலைத்திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அமைச்சரவை உபகுழுவாக ஊடாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அத்துடன், கிரிக்கெட் தடையை நீக்குவது தொடர்பாக ஐசிசியுடன் ஆலோசித்து விரைவில் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை கிரிக்கெட்டின் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.டி.சித்ரசிறி தலைமையிலான குழுவின் அறிக்கையில் கிரிக்கெட் ☞ 2

# வடக்கு கிழக்கில் போதைப் பாவனை முப்படைகள் ஊடாகவே ஊக்குவிப்பு

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

சிறிலங்கா அரசானது இன்னும்ஆயுதக் கிளர்ச்சியை தோற்கடிக்கும் மனோநிலையில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால் அரச கட்டுமானமான முப்படைகள் ஊடாகவேஇந்தபோதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுகின்றது. அரசினுடையவும் இராணுவத்தினரதும் முழுஒத்துழைப்புடனுமே இவை நடைபெறுகின்றன. இராணுவம் தான் நேரடியாகவே அந்த செயற்பாட்டை செய்துவருகின்றது.

என்றுதமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானகஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல்கள் அமைச்சு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார ☞ 2

# பெருந்தோட்ட மக்களுக்கு முகவரி பெற்றுத்தர நீதிமன்றம் உத்தரவு

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் அனைத்துமக்களுக்கும் முகவரியை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டினை தொடருமாறு உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

முவன்கந்த தோட்டத்தில்வசித்துவருகின்ற சுரேஷ்ஜீவரத்னம்என்ற இளைஞர் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைகளை முடிவிற்குகொண்டுவந்த போதேஉயர்நீதிமன்றம் அரசுக்கு இதனை அறிவித்தது.

சுரேஷ்தாக்கல்செய்த மனுவில்,தமதுதோட்டம் உள்ளடங்களாக அனைத்து பெருந்தோட்டப் பகுதிகளிலும் வாழும்மக்களுக்கு200 வருடங்களாக கிடைக்காதுள்ள முகவரியை பெற்றுக்கொடுக்க உத்தரவிடுமாறு ☞ 2

# நுண்நிதி நிறுவனங்களை கண்காணிக்க புதிய சட்டம்

## விரைவில் வரும் என்கிறார் நீதி அமைச்சர்

இந்நாட்டில் இயங்கி வரும் நுண்நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கும் வகையில் புதிய சட்டமூலமொன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளதாகநீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்புஅமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீதி அமைச்சிற்கு 21 நிறுவனங்களின் ☞ 2

# பெண்களின் போராட்டம் மீதும் பொலிஸார் நீர்த்தாரை தாக்குதல்

தேசிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவினர் நடத்திய போராட்டம் மீது பொலிஸார் நீர்த்தாரை தாக்குதல் நடத்தினர்.

நாடாளுமன்ற சுற்றுவட்ட பகுதியில் நேற்றுக்காலை தேசிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவினரால்மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதிகரித்து வரும் வாழக்கைச்செலவு, மக்கள் மீதான தாங்கமுடியாதவரிச்சுமை மற்றும் நாட்டில் நிலவும் ஏனைய பிரச்சினைகளுக்குஎதிராக தேசிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவின் ஏற்பாட்டில்போராட்டம்முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்கள் நாடாளுமன்றத்தை நோக்கிப் பேரணியாகச்செல்ல முற்பட்ட நிலையில், கலகத்தடுப்பு பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

அதனைத்தாண்டி, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பியவாறு நகருவதற்கு முனைந்தபோது பொலிஸார் நீர்த்தாரைத் தாக்குதலைத் தொடங்கினர்.

இதனையடுத்து நாடாளுமன் ☞ 8

## காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டம் குறித்து

# ரணில் - ஜோன் கெரி நேற்று துபாயில் சந்தித்து பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் அமெரிக்கஜனாதிபதிஜோ பைடனின் காலநிலை மாற்றம் தொடர்பான விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும்இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

துபாயில்நடைபெறும் கோப்- 28 மாநாட்டில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி, மாநாட்டுக்கு இணையாக நடக்கும் பக்கச்சந்திப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றார். அந்த வகையில் அவர் கெரியையும் சந்தித்துப் பேசினார்.

அதன்போது நவீன முன்னெடுப்புகள் மூலம் காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடுவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் நிறுவப்படுவதற்கு உத்தேசிக்கப்பட் ☞ 2

## இனி இது .....

ஒன்றும் செய்யமுடியவில்லை. நிலையியல் கட்டளைகளைத் திருத்தியாவது சஜித்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்கிற அளவுக்கு ஆளும் தரப்பினருக்கு சஜித்தின் உரைகள் கடுப்பைக் கிளப்புகின்றன. அந்தளவிற்குத்தனது உரைகளில் கடும்விமர்சனங்களை முன்வைக்கிறார் சஜித்.

சஜித்தின் உரையைத்தடுப்பதற்காக நிலையியற் கட்டளைகளைத் தி-ருத்தப் போனால் அது தமக்கே திருப்பித் தாக்கிவிட்டாலும் என்ற பயத்தில் அந்த விடயத்தை ஆறப்போட்டிருக்கும் ஆளும் தரப்பு, இப்போது சஜித்தின் உரைகளில் கடும்விமர்சனங்களை எதிர்கொண்டிருப்பவர்களை, குறிப்பாக அரச அதிகாரிகளைத் தூண்டிவிட்டு சில நகர்வுகளை மேற்கொள்வதற்குப் பார்க்கின்றது.

அந்த வகையில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு எதிரான பல குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கடிதம் ஒன்று சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக எதிர்க்கட்சிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதி அமைச்சர்கள் மற்றும் நீதிபதிகள் போன்ற உயர்மட்ட அதிகாரிகளின் தனியுரிமை குறித்து பிரேமதாச தொடர்ந்து விமர்சித்து வருவது குறித்த கவலைகளை அந்தக் கடிதம் கோடிட்டுக் காட்டுவதாகக் கூறப்படுகிறது. மேலும், அவர் அடிக்கடி நாடாளுமன்றம் மற்றும் தொலைக்காட்சிகளில் உரையாற்றுகின்றார் என்றும், அதே நேரத்தில் சக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிரட்டல் விடுக்கிறார் என்றும் குற்றம் சாட்டப்படுகின்றது.

இந்தக் கடிதத்தின் பின்னணியில் உள்ள மூத்த அதிகாரி, அறிவுறுத்தல்களை வழங்கிய அலுவலகத்தின் தலைவர் மற்றும் கடிதம் தயாரிக்கப்பட்ட இடம் பற்றிய தகவல்கள் எதிர்க்கட்சிகளிடம் இப்போது இருப்பதாக தெரிவிக்கின்றன. சஜித்தின் அடுத்தடுத்த உரைகளில் இது தொடர்பிலும் கடுமையான விமர்சனங்களை எதிர்பார்க்கலாம் என்கின்றனஎதிர்க்கட்சிவட்டாரங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கிற்கு ஆற்றிய சேவையில் 1/1000 பங்கை வழங்கியவர்கள் இந்த நாடாளுமன்றத்தில் இல்லை. இந்தியாவில் இருந்து வந்த 12,800க்கும் மேற்பட்டவர்கள் வடக்கில் இருந்தனர். அவர்களிடம் பிறப்புச்சான்றிதழ்களோ அடையாள அட்டைகளோ இல்லை.

கிழக்கில் 3000க்கும் மேற்பட்ட அவ்வாறான மக்கள் இருந்தனர். அந்தப் பிரச்சனைகளை தீர்க்க நடமாடும் சேவைகளை ஏற்பாடு செய்தனர். இந்த பிரச்சனையைத் தீர்க்க ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கூட முன்வரவில்லை.

வடக்கில் உள்ள தமிழ் மக்கள் இன்னமும் சமாதானத்தையே கேட்கின்றனர். நாடாளுமன்றத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து தமிழ் மக்களின் கருத்துக்களே அல்ல. இவர்கள் அரசியல் பிழைப்புக்காக உழைக்கிறார்கள். நாடாளுமன்றம் மக்கள்தொகையில் ஒரு பிரிவை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை - என்றார்.

நீதிபதிகள் மீது காரணமின்றி குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை தவிர்க்குமாறும் நீதி அமைச்சர் இதன்போது கேட்டுக்கொண்டார். நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதிபதிகளை அவமதிக்கக்கூடாது என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இது நடந்தால், நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க, சட்டமன்றம், நிறைவேற்று மற்றும் நீதித்துறை எவ்வாறு இணைந்து செயல்படும் என்றார்.

## பார்வையற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களுக்கும்வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்படும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள 10 வாக்களிப்பு நிலையங்களில் முன்னோடித் திட்டமாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியடைந்தது.

செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினரின் தேவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லக்கூடிய வசதிகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படும். அங்கவீனமுற்ற சமூகத்தினருக்கு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## கஜேந்திரகுமார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்கள் மீதான குழு நிலை விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குகிழக்கில் 60,000 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருக்கின்றன. இவர்கள் ஏற்கனவே போரால் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியாக நலிவுற்றுக் காணப்படுகின்றனர். போரினால் இவர்களுடைய வதிவிடங்களும் சொத்துக்களும் அழிவடைந்துள்ளன. இவர்கள் வாழ்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது முக்கியமானதாகும். இவற்றிற்குத் தீர்வு வழங்காமல் அவர்களால் நகர முடியாத சூழலே காணப்படுகின்றது.

வழங்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டமானது அவர்களுக்கு உதவியாக இருந்தாலும், அரச வீட்டுத் திட்டங்களுக்கு வழங்கப்படும் தொகையானது குறைவாகவே வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் வழங்கிய தொகையை வைத்துக் கொண்டு முழுமையாக வீட்டினை பூர்த்தி செய்ய முடியாத நிலையே இருந்தது. அதுமட்டுமல்லாமல் - வீட்டுத்திட்டத்துக்கு வழங்கப்படும் தொகைகள் படிப்படியாகவே வழங்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட தொகைப் பணத்தினை வழங்கி அந்த வீட்டின் அமைப்பு குறிப்பிட்ட நிலைக்கு வந்ததன் பின்னரே, அதனை உறுதிப்படுத்தி அடுத்தகட்ட பணிக்கான பணத்தொகையை வழங்கியிருந்தனர்.

ஆட்சியாளர்கள் வழங்கும் பணத்துக்கு முதல் படிக்கரிய வீட்டுத்திட்ட பணிகளை முடிக்கவே நிதி போதாதுள்ளது. இந்த நிலையில் குறித்த கட்டடப் பணிகளை நிறைவு செய்வதற்காக கடன்களைப் பெற்றும் சொத்துக்களை அடகு வைத்தும், வீட்டைக் கட்டி முடிக்க முயன்றனர். இறுதியில் வீடுகட்டி முடிக்கப்படும்போது அவர்கள் பெரும் கடனாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

போர் முடிவடைந்த கையோடு நுண் கடன் நிதி நிறுவனங்களும் இந்த நிலைமைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி மக்களை கடன்குழிக்குள் தள்ளி மீளமுடியாத அளவுக்கு கடனாளிகளாக்கியுள்ளன.

தமிழ் மக்களிடம் இருந்த வீடுகள் மற்றும் சொத்துக்கள் இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டிருந்த நிலையில் ஆக்கக்குறைந்தது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆட்சியாளர்கள் நட்ட ஈடுகளையாவது வழங்கியிருக்கவேண்டும். அதற்கு மேலதிகமாகவே வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுத்திட்டங்களை வழங்கும் நடவடிக்கைகளுக்குச் சென்றிருக்க வேண்டும்.

ஆனால் மக்களிடம் இருந்த சொத்துக்களை அழித்துவிட்டு அந்த அழித்த சொத்துக்களுக்கு நட்டஈடுகளை வழங்காமல், வீட்டுத்திட்டங்கள் என்ற பெயரில் மக்களை கடனாளிகளாக்கிவிட்ட நிலைமையே இன்று உருவாகியிருக்கிறது.

விசேடமாக வடக்கு கிழக்கு 30 வருடங்களுக்குமேலாக பொருளாதார நிலையில் பின்னோக்கியிருக்கும் நிலையில், பெண் தலைமைத்துவ குடும்பங்களை மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

பெண்கள் விவகாரம் தொடர்பாக பிரதியமைச்சர் ஒரு பெண்மணியாக இருக்கும் நிலையில், பெண்கள் சிறுவர்கள் தொடர்பாக அவர் அக்கறையுள்ளவராக இருப்பார் என நம்புகின்றேன். அவர் இந்நிலைமைகளை புரிந்துகொள்ளுவார் என நினைக்கிறேன்.

அவர் இந்த விடயத்தில் மிக முக்கிய பொறுப்பாக எடுத்து உங்கள் ஆட்சியில் இருக்கும் ஏனைய அமைச்சுக்களுடனும் பேசி இந்த விடயங்களில் மாற்றங்களைக்கொண்டுவருவதற்கு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றையது சிறுவர்கள் என விழிக்கும்போது இன்று சிறிலங்காவின் கல்விமுறைமையே பிரச்சினைக்குரிய விடயமாகும். அவை நாட்டின் அபிவிருத்தி நோக்கியதானதாகவோ உற்பத்தியை நோக்கியதாகவோ பொருளாதார முதலீடுகளை நோக்கியதாகவோ அமையவில்லை. மாறாக உலக வங்கியிலும், ஆசிய அபிவிருத்தி வங்கியிலும் கடனை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்ற மனோநிலையில் இருந்து தயாரிக்கப்படும் திட்டங்களாகவே கல்வித் திட்டங்கள் இருக்கின்றன.

இது நான் மட்டும் சொல்லும் விடயம் அல்ல. பொதுவாகவே புத்திஜீவிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களுமாகும். அதாவது சிறிலங்காவுக்கு தேவைப்படுகின்ற வகையிலான திறமைகளையுடைய மனிதர்களை சிறிலங்காவின் கல்வித் திட்டம் உருவாக்குவதில்லை மாறாக பரீட்சை மைய தகைமைகளைக் கொடுக்கின்ற நிலைமையை மட்டுமே வழங்குகின்றது.

தொழில்முறை விற்பன்னர்கள், முதலீட்டாளர்கள் போன்றவர்களைக் காண்பதாக இருந்தால் அநேகமாக அரச கல்வித் திட்டத்தை சார்ந்திராதவர்களாகவே இருப்பார்கள் அல்லது வெளிநாடுகளில் பெற்ற திறமைகளை வைத்தே முன்னேறுகின்றனர்.

சாதாரண மக்களுக்கு போதிய வல்லமை இருந்தும்கூட அவர்களுடைய பொருளாதார நிலைமையால் கல்வியைப் பெற முடியாத சூழலுக்குள் தள்ளி இறுதியில் நாடுதான் மோசமாகப் பாதிக்கப்படுகின்றதுஎன்றவிடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அத்தோடு கல்வி கிழக்கைப் பொறுத்த வரையில் வழிகாட்டலும் ஆலோசனையும் என்பது மிகமுக்கியமானது வடக்கு கிழக்கில் போதைக்கு அடிமையாதல் என்பது மிகப் பெரும் பிரச்சனையாக உருவாகிவருகின்றது. ஏனென்றால் - சிறிலங்கா அரசானது இன்னும் ஆயுதக் கிளர்ச்சியை தோற்கடிக்கும் மனோநிலையில்தான் இன்னும் ஒழிக்கொண்டிருக்கிறது. இதனால் அரச கட்டுமானமான முப்படைகள் ஊடாகவே இந்த போதைப் பொருள் பாவனை ஊக்குவிக்கப்படுகின்றது. அரசினுடையவும் இராணுவத்தினரதும் முழு ஒத்துழைப்புடனுமே இவை நடைபெறுகின்றன. இராணுவம் தான் நேரடியாகவே அந்த செயற்பாட்டை செய்துவருகின்றது.

இப்படியானஒருசூழலில்வடக்கு கிழக்கில் பெரும் அளவிலான இளைஞர்கள் போதைவஸ்துக்கு அடிமையாக்கப்பட்டு மோசமான நிலைமைக்கு தள்ளப்படுகின்றார்கள். எனவே பாடசாலைகளில் உளவள செயற்பாடுகள் மிகமுக்கியமானதாகும். பாதிக்கப்படுபவர்களை ஏதோஒருவழியில் அதிலிருந்து மீட்க வேண்டுமாயின் இத்தகைய உளவள செயற்பாடுகள் மிகமுக்கியமானதாக இருக்க வேண்டும்.

பாடசாலைகளில் இதற்கென ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, குறித்த வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்குரிய பொருத்தமான செயற்திட்டங்களையோ, வளங்களையோ அரசு செயற்படுத்த முயலவில்லை. மாணவர்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்குரிய மனோநிலையை உருவாக்கி, அவர்களை நற்பிரஜைகளாக்குவதற்கு மாறாக அவர்களைக் குற்றவாளிகளாக்கி சமூகத்திலிருந்து அவர்களை ஒதுக்கும் நிலைமையையே உருவாக்கியிருக்கிறது. இவை இவர்களை விரக்தி மனோநிலைக்கு கொண்டு சென்று தற்கொலை போன்ற செயற்பாடுகளைச் செய்யத் தூண்டுகின்றது. எனவே இத்தகைய நிலைமைகளை அமைச்சர் விளங்கிக் கொண்டு மிக அவசரமாக தலையிடவேண்டும் என்றார்.

## ரணில் -....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள காலநிலைமாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் மற்றும் காலநிலை சவால்களுக்கு நிலையான தீர்வுகளை அமுல்படுத்த இலங்கை தயாரித்துள்ள விரிவான திட்டம் குறித்தும் இங்கு ஜனாதிபதி விளக்கினார்.

காலநிலை மாற்றத்தை திறம்படக் கையாள்வதற்குத் தேவையான நிதி திரட்டும் முக்கியமான பிரச்சினை குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், காலநிலை தொடர்பான திட்டங்களுக்கு நிதி மூலங்களை மேம்படுத்துவதில் தனியார் துறையின் பங்களிப்பு இன்றியமையாதது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் அதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் ஆகியவற்றை நேரில் காண விரைவில் இலங்கைக்கு வருமாறும் ஜோன் கெரிக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

## கிரிக்கெட்டின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டு தொடர்பாக பல புதிய முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றார்.

## பெருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர்நீதிமன்ற நீதியரசர்களான எச்.எம்.டி.நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்கா டி சில்வா, முவன்கந்த தோட்டத்தைச் சேர்ந்த அனைவருக்கும் முகவரியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சட்டத்தரணி லக்ஷான் டயஸ் தெரிவித்ததாவது:

தற்போது முவன்கந்த தோட்டத்திற்கும் எதிர்காலத்தில் ஏனைய தோட்டத்திற்கும் அடையாளத்தினை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கைகளை எடுப்பதாக உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக மனுதாரர்கள் மகிழ்ச்சி கொள்ள வேண்டுமென உயர்நீதிமன்றம் இதன்போது கூறியுள்ளது. இதனையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு இடையில் அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் மீண்டும் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படும் என்ற அடிப்படையில் குறித்த வழக்கு விசாரணை நேற்று முடிவுக்குக் கொண்டவரப்பட்டது.

## நுண்நிதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் சட்ட அமுலாக்கம், சட்ட மறுசீரமைப்புப் பணிகள் உட்பட பல்வேறு துறைகள் அடங்குகின்றன.

இந்நாட்டு நீதிமன்றங்களில் 11 இலட்சத்துக்கும் அதிகமான வழக்குகள் தேங்கியுள்ளன. நீதிமன்றங்களில் உள்ள இந்த வழக்குகள் தாமதமாகாமல் இருக்க கடந்த காலங்களில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சில வழக்குகளுக்குத் தீர்வு காண இணக்க சபைகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

குற்றவியல் வழக்குகளை விரைவாகத் தீர்க்க உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள் உள்ளன. ஆனால் நம் நாட்டில் மிகவும் காலாவதியான சட்டக் கட்டமைப்பே உள்ளது. எனவே, ஒரு குற்றவியல் வழக்கை நிறைவு செய்வதற்கு அதிக காலம் எடுக்கின்றது. குற்றவியல் வழக்குகளில் ஏற்படும் காலதாமதம் ஒரு பெரிய பிரச்சினையாகவுள்ளது. அந்த வழக்குகள் தாமதமாவதால் யாருக்கும் நீதி கிடைக்காது. இதனால், இரு தரப்பினரையும் சமரசம் செய்து, குறைந்ததண்டனையுடன்வழக்கை நிறைவு செய்ய வாய்ப்புள்ளது. இது அனைவருக்கும் பயனளிக்கிறது.

குற்றவியல் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட சட்ட மூலம் எதிர்வரும் ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. சில அபிவிருத்தி அடைந்த நாடுகளில், சிறிய குற்றம் புரிபவர்கள் சிறையில் அடைக்கப்படுவதில்லை. பெரும்பாலானவர்கள் தங்கள் செய்யாத தவறுக்காக சிறைக்குச் செல்கிறார்கள். சமூகத்தின் தவறுகளால் சிலர் சிறைக்குச் செல்கிறார்கள்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்ட மலையகத் தமிழர் மீளவேண்டும்

## அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு



சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இலங்கையில் இருந்து பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் மீண்டும் நாடு திரும்ப வேண்டும் என தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திஅமைச்சரானஜீவன் தொண்டமான்தெரிவித்துள்ளார்.

'சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்உள்ளவிடயங்களைமுழுமையாக அமுல்படுத்துவதில் இந்திய அரசு தவறிழைத்துவிட்டதாக' சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை வரவேற்கும் விதமாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இழைக்கப்பட்டுள்ள வரலாற்றுத் தவறை சரி செய்வதற்கு தமக்குள்ள பொறுப்பை இலங்கைமற்றும்இந்தியஅரசுகள் நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவளி தமிழர்கள் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஊடாக பலவந்தமாகநாடுகடத்தப்பட்டனர். இவ்வாறு சென்றவர்களில் ஒரு தரப்புக்கு இன்னமும் குடியுரிமை வழங்கப்படாமல் இருப்பது கவலையளிக்கின்றது.

இதனால் அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. கடும் போராட்டங்களுக்கு மத்தியிலேயே எமது மக்களுக்கு இலங்கையில் குடியுரிமையை பெற்றுக்கொடுத்தோம். இந்த வரலாற்று தவறை சீர்செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கைஎடுத்துவருகின்றார்.

எமது மக்களுக்கு நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டுவதற்கான நல்லிணக்க பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன், 10 பேர்ச்சஸ் காணி உரிமையும் வழங்கப்பட்டுவருகின்றது. இவை போதுமானவைஅல்ல. பலவந்தமாக நாடு கடத்தப்பட்டுள்ள மக்கள் இலங்கை திரும்ப வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும். - இவ்வாறு அமைச்சர் ஜீவன் தெரிவித்துள்ளார். (05)

# எந்தச் சந்தர்ப்பத்திலும் ரணிலை தோற்கடிக்கோம்

## பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க நாங்கள் ஆதரவு வழங்க மாட்டோம்எனஆளும்தரப்புநாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த பெருந்தலைவராகவே ரணில் விக்ரமசிங்கவை ஆளும்கட்சியினர் பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்துள்ள வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்கச் சிலர் சதித் திட்டம் தீட்டுகின்றனர் என்றும் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

அவர்களது இந்த சதித் திட்டம் வெற்றியளிக்காது என்றும் வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடித்து அரசை தவிக்கும் அவர்களது சதி முயற்சிக்கு மொட்டுக் கட்சி இடமளிக்காது என்றும் தெரிவித்துள்ளார். (05)

# கொழும்பு - மும்பை இடையே இனி தினசரி விமான சேவை

கொழும்பு மற்றும் மும்பை நகரங்களுக்கிடையே தினசரி இரட்டை விமான சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன்எயார்லைன்ஸ்நிறுவனம் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் கொழும்பு மற்றும் மும்பை இடையே தினசரி இரட்டை விமான சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி கொழும்பு மற்றும் மும்பைக்கு இடையில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை 50 வீதமாக அதிகரிக்கும் என விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

மும்பையிலிருந்து வரும் பயணிகள் கொழும்பில் இருந்து சிங்கப்பூர், கோலாலம்பூர், பாங்கொக், லண்டன், பிராங்பேர்ட், பாரிஸ், மெல்போர்ன் மற்றும் சிட்னி போன்ற இடங்களுக்குச் செல்லவும் இதன் மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

மேலும் இது இந்தியாவிற்கு நிதி மற்றும் பொழுதுபோக்கு மூலதனத்திற்குச் செல்லும் பயணிகளின் வசதியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தற்போது இந்தியாவில் டெல்லி, பெங்களூர், ஹைதராபாத், கொச்சி, மதுரை மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்களுக்கு 100 இற்கும் மேற்பட்ட விமானசேவைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஆள்வோருடன் இனிமேல் பேச்சு ஏதும் கிடையாது

## ஹரிணி கூறுகிறார்





பெண்கள் மீதான பொலிஸாரின் நீர்த்தாரை பிரயோகத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அதிகாரிகளை மகிழ்விப்பதற்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் மா அதிபர், நிராயுதபாணியான அமைதியான முறையில் போராடியவர்கள் மீது நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளார் எனக் குற்றம் சாட்டினார்.

வரவு செலவுத் திட்டத்தில் சிறுவர், மகளிர் விவகார அமைச்சின் கொடுப்பனவு 51 வீதத்தால் குறைந்துள்ளதுஎன்றும்அதனால்போாக்கு, சுகாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே தற்போதைய அரசாங்கத்துடன் இனிமேலும் பேச்சு நடத்த தாம் தயாரில்லை என்றும் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டுள்ளார். (05)



# ஞானசாரருக்கு எதிரான வழக்கு மார்ச் மாதத்திற்கு ஒத்திவைப்பு

கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இஸ்லாத்தை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் கைது செய்யப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற இந்த ஊடக சந்திப்பு தொடர்பாகக்; கைது செய்யப்பட்ட கலகொட அத்தே ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (05)

# போதகருக்கு ஒரு சட்டம் தேரருக்கு ஒரு சட்டமா?

## சாணக்கியன் கேள்வி

தமிழர்களைத் துண்டு துண்டாக வெட்டுவேன் எனக் கருத்துத் தெரிவித்த அம்பிட்டியே சுமண தேரருக்கு ஒரு சட்டமும் அண்மையில் கைதுசெய்யப்பட்ட மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோவிற்கு இன்னுமொரு சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் கைதான போதகர் ஜெரோம் பெர்னாண்டோ ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 13 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த ஐசிசிபிஆர் சட்டம் சிறுபான்மை தமிழ் பேசும் மக்களுக்கும், எண்ணிக்கையில்சிறுபான்மையானமக்களுக்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது. அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் அவர்கள் தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் என்பதற்கு ஏன் இன்னும் அவரைக் கைது செய்யவில்லை?

"போதகருக்கு ஒரு சட்டம் தேரருக்கு ஒரு சட்டமா?' என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார். (05)



# உலக மாற்றுத்திறனாளிகள் நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு, புலர் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் வலி.மேற்கு பிரதேச சபைமண்டபத்தில்சர்வதேசமாற்றுத்திறனாளிகள் தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலர் திருமதி.கவிதா உதயகுமார், வட்டுக்கோட்டை பிரதேச வைத்திய அதிகாரி திரு.சி.செந்தூரன், ஓய்வுநிலை பேரதேனிய பல்கலைக்கழக விரிவுரையாளர் வைத்தியர் தி.ஆனந்தமூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாற்றுத் திறனாளிகளுக்கு, புலர் அறக்கட்டளையின் வெளிநாட்டு, உள்நாட்டு கருணை உள்ளம் கொண்ட நன்கொடையாளர்களின்உதவியுடன்கொள்வனவு செய்யப்பட்ட நுளம்பு வலைகள், போர்வைகள், மழைக் கவசங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. (05)

# டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பில்



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து டெங்குதடுப்புஉதவியாளர்கள்திங்கட்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நிரந்தர நியமனம் மற்றும் நிலுவை கொடுப்பனவு வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் சிக்கல்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமெனக் கோரியே குறித்த பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பலகோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் கையளித்துள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மண் வளம் காப்போம்!

ஆண்டுதோறும் மார்கழி 5 உலக மண் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. வளமான மண்ணின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்கும், மண்ணை வளமாக வைத்திருப்பதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மண் வளம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த சர்வதேச தினத்தை அறிவிக்க வேண்டும் என்று சர்வதேச மண் அறிவியல் சங்கம் பரிந்துரைத்தது. அதையேற்று ஆண்டுதோறும் மார்கழி 5 உலக மண் தினம் 2014 முதல் கொண்டாடப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

இந்த ஆண்டுக்கான மண் தின கருப்பொருள் ‘மண் மற்றும் நீர் என்பன வாழ்வின் ஆதாரம்’ என்பதாகும். நிலையான மண் மேலாண்மை மூலம் 58 சதவீதம் அதிக உணவு உற்பத்தி செய்ய முடியும். ஒவ்வொரு அறுவடையின்போதும் மண்ணில் ஊட்டச்சத்து இழப்பு ஏற்படுகிறது. மண்ணை நிலையான முறையில் நிர்வகிக்கவில்லைஎன்றால், அதன் வளம் படிப்படியாகக் குறைந்துவிடும்.

கடந்த 70 ஆண்டுகளில் உணவில் கனியுப்புக்கள் உள்ளிட்ட ஊட்டச்சத்துகளின் அளவு வெகுவாகக் குறைந்துள்ளது. உலக அளவில் 2 பில்லியன் மக்கள் நுண்ணூட்டச் சத்துகள் இல்லாததால் பாதிக்கப்படுகின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மண் வளத்தை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

நிலையான வேளாண்மைக்கு முதன்மை ஆதாரமாக உள்ள மண், உழவர்களின் உணர்வோடு கலந்தது. தினமும் அவர்களுடன் உரையாடும் உயிரோட்டம் உள்ள ஒரு பெட்டகம். நாட்டின் மண் வளம், மனித வளமும் இணைகோடுகளாகவே பயணிக்கின்றன.

மண்ணில் தோன்றும் பல வினைகள் ஓசோன் படலத்தின் சிதைவையும், புவி வெப்பமடைதலையும், வான் மழையையும் தீர்மானிப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மனித உடலின் சமிபாட்டு மண்டலத்துக்குநிகராக, இடும் உரங்கள் அனைத்தையும் உயிர்ச்சத்தாய் உருமாற்றிப் பயிருக்கு அளித்து, கழிவுகளை மறு சுழற்சி செய்யும் பணியை மண் மேற்கொள்கிறது.

கரியமிலவாயுவை (கார்பனீரொட்சைட்) வெளியேற்றி, உயிர் வாயுவை (ஒட்சிசன்) வேருக்கு அளிக்கும் மண், இயற்கை நமக்கு அளித்த ’ஒக்ஸிஜன் சிலிண்டர்’ ஆகும். பெருகி வரும் மக்கள் தொகைக்கு உணவளிக்க, பயிர் விளைவிக்கும் மண், உயிர் பிறப்பிக்கும் கருவறைக்கு நிகரானது.

வரைமுறை ஏதுமின்றி கழிவுகளை அதன் மீது கொட்டினாலும், பெருந்தன்மையுடன் அதை ஏற்றுக்கொண்டு, கழிவுகளின் நச்சுகள் பயிரை தாக்கா வண்ணம் பாதுகாப்பு அளிப்பதைத்தான் மண்ணின் தாங்கு திறன் என்று அறிவியல் கூறுகிறது.

ஒரு தேக்கரண்டி வளமான மண்ணில், பல கோடிக்கணக்கான பாக்டீரியாக்கள், பல மீற்றர் நீளம் உடையபூஞ்சனஇழைகள், வளமானஆயிரக்கணக்கான நுண்ணுயிர்கள் வாழ்கின்றன.

ஒருசதுரஅடிவளமானமண்ணில், 100பூச்சியினங்கள் மற்றும், 30 மண் புழுக்கள் இருக்கும். வளிமண்டல தழைச்சத்தை நிலை நிறுத்தியும், பயிருக்கு கிடைக்காத நிலையில் உள்ள ஊட்டச்சத்துக்களை கரைத்து பயிருக்கு அளித்தும், வறட்சியை தாங்கும் திறனை பயிருக்கு அளித்தும் மண் உதவுகிறது.

மண் என்ற பெயரில் வருங்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்வது உயிரோட்டமிகு பரிசா அல்லது வெற்றுத்தரிசா என்பது, இன்று நாம் மண் வளத்தை எப்படி பாதுகாக்கிறோம் என்பதிலேயே உள்ளது. நிலையான வேளாண்மைக்கு தன்னலமற்ற உழைப்பை நல்கும் மண்ணின் வளத்தை பாதுகாக்க வேண்டும்.

# கற்பகதரு என்னும் அற்புதம்
# பனையின் சுவையான பழம்

அங்கம் –25



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பழக்கடைகளில் பலபழங்கள் மத்தியில் பனம்பழம் இடம் பெறாவிடினும் தெரு ஓரங்களில் பனம் பழங்களை விற்பதும் அதனை வாங்குவதும் நடைபெற்று வருகிறது என்னும் செய்தியானது - எங்களின் சொந்தப்பழம் எங்களை விட்டுப் போய்விடவே இல்லை என்பது மகிழ்வினை ஏற்படுத்துகிறதல்லவா! தமிழ்நாட்டில் சேலத்தில் தெரு ஓரங்களில் பனம்பழங்களை விற்பவர்களைக் காணலாம்.விவசாயிகள் பலர் சேலம் பகுதியில் தெரு ஓரங்களில் பனம்பழக் காலங்களில் பனம் பழங் களை எடுத்துவந்து அதனைக் குவியலாக வைத்து விற்று வருகிறார்கள்.பச்சையாகவும் கொடுக்கிறார்கள். விரும்பினால் அதே இடத்தில் பனம்பழத்தினைச் சுட்டும் விற்பனை செய்கிறார்கள்.ஒரு பனம் பழத்தை இருபது அல்லது முப்பது ரூபாய்க்கு விற்பதாக விற்பனையில் ஈடு பட்டி ருக்கும் விவசாயிகள் தெரிவிக்கிறார்கள். இலங்கை யிலும் பனம்பழங்கள் விற்கப்பட்டன என்றும் அறிந்திட முடிகிறது.பனம்பழக் காலத்தில் புத்தளம், சிலாபம் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்படும் பனம்பழங்கள் நூறு ரூபா தொடக்கம் நூற்று ஐம்பது ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யபட்டிருக்கிறது. எங்களின் சொந்தப் பழமான பனம்பழமானது மற்றய பழங்களுக்கு ஈடு கொடுக்கும் பாங்கிலே இருக்கிறது என்பதைக் கருத்திருத்துதல் அவசியமே யாகும். யாழ்ப்பாணம் என்றவுடன் மாம்பழமே யாவரதும் நினைவுக்கு வந்து நிற்கும். மாம்பழத்துடன் பனம்பழமும் யாழ்மண்ணில் சிறப்பாய் அமைகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

பனம்பழமானது ஏனைய பழங்களிலிருந்தும் தனித்துவம் மிக்கதாகவே இருக்கிறது என்பது முக்கியமாகும். பனம்பழத்தின் சிறப்பே அதில் அமைந்திருக்கும் களித்தன்மையே எனலாம். ஏனைய பழங்களில் இவ்வாறான களித்தன்மை இல்லை என்றுதான் சொல்லலாம். பனம்பழத்தில் காணப்படும் களியின் காறல் தன்மையும், இனிப்புத் தன்மையும் ஏனைய பழங்களில் இல்லவே இல்லை என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். இவ்வாறு காண ப்படுவதால்த்தான் பனம்பழம் தனித்துவமான பழமாக விளங்குகிறது எனலாம்.ஏனைய பழங்களை நாங்கள் மரத்திலிருந்து பறித்துத்தான் எடுக்கிறோம்.சில வகைகளை முற்றிய பருவத்தில் மரத்திலிருந்து பறித்து அவ ற்றை பல முறைகளில் பதப் படுத்தியே பின்னர் பழமாகச்சுவைக்கின்றோம். ஆனால் யாருக்கும் எந்தவிதக் கஷ்டமும் கொடுக்காமல் தானாகவே மரத்தில் பழுத்து நிலத்தில் விழுந்து நாமெடுத்துச் சுவைத்திட வைக்கும் நிலையில் இருப்பது தான் பனம்பழமாக இருக்கிறது. இதனாலும் பனம்பழம் தனித்துவமான பழமாகவே தெரிகிறதல்லவா !

பனம்பழத்தினை நெருப்பில் சுட்டு அதன் தோலினை நீக்கிய பின்னர் அதில் இருக்கும் களியினைக்கையினால்எடுக்கின்றனர். அந்தக் களியினைச் சோற்றுடன் கலந்து அதில் தேங்காய்ப் பாலையும் விட்டு பிசைந்து உண்ணும் வழக்கமும் மக்களிடையே காணப்படுகிறது. சிலபேர் சுட்ட பனம்பழத்தையே





உணவாக்கினார்கள் என்பதும் நோக்கத்தக்கது. தங்களின் ஒரு நேர உணவாகவே பனம் பழத்தினை நெடுங்காலமாகவே மக்கள் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம்.

பனம்பழம் என்றதும் பனங்காய்ப்பணியாரம் கட்டாயம் நினைவிலே வந்து நிற்கும். பனங்காய்ப் பணியாரத்தின் மூலப் பொருளே பனம் பழத்தின் களியேயாகும்.எங்கள் தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர்கள் அவர்கள் பனம் பழத்தையும், அதிலிருந்து செய்யப்படும் பணியாரத்தையும் எப்படிப் பார்த்து எமக்கெல்லாம் தந்துநிற்கிறார் என்பதை அறிந்திட வேண்டாமா !

கைப்புமுப் பும்போக நாலுமொன் றாகவே
கலந்து சுவைக்கும் பனம்பழத்தின்
துய்க்குஞ் சுவைக்கு நிகரான வேறொன்றைச்
சொல்ல முடியுமோ ஞானப்பெண்ணே
அந்தப் பனைதரும் நல்ல பழத்தினை
யாராய்ந் தெடுத்துத் தழலிலிட்டே
வெந்த பழத்தினில் நீரிற் கழுவியே
மேற்றோலை நீக்குவார் ஞானப்பெண்ணே
கையாற் பிசைந்து கறந்து கறந்து
களியினை வாய்வைத்துத் துறுஞ்சியுண்டாற்
செய்தேன் திரட்சிப்பால் சீனி முதலிய
தித்திப்பென் றுண்ணாரே ஞானப்பெண்ணே
வாய்ச்சிட்ட கற்பக றாருவெ னும்பனை
மதுரப் பழத்தினை யாமறந்தே

ஈச்சம் பழத்திற்கு வாயூறிக் கைப்பொருள்
இழக்கின்ற வாறென்ன ஞானப்பெண்ணே
காய்முற்றி நன்றாகக் கனிந்து பரிமளித்து
வேய்முற்று தோளி விழுமெடுத்துத் – தீமுற்றுஞ்
செந்தழலி லப்பழத்தைத் திட்டமிட்டமுடன் சுட்டெடுத்துச்
சந்தநீ ரிற்கழுவித் தோல்தள்ளி – வந்திருந்து
கையாற் பிசைந்து கறந்துகுடிப் பாரதற்குச்
செய்தேன் திரட்சிப்பால் சீனியொவ்வா – செய்துவைத்த
காடிபுளி நீர்தெளித்தும் காதலுட னுண்பதுவு
நாடி யுரைப்பர் நல்மென்றே – தேடி
கறந்தெடுத்த நல்லபனங் காய்க்களியைக் காய்ச்சி
சிறந்தமா சீனியுடன் சேர்த்து – நிறந்திகழும்
எண்ணெயில் நெய்யி லியைந்தொன்றி லேயிட்டுப்
பண்ணிகாரஞ் சுட்டுப் பாத்துண்பார் – திண்ணமாய்
அல்லல் பசிக்கு மரும்பிணிக்கு மாரதமுதாஞ்

மதுரமாம் பனம்பழத்தினைத் தங்கத்தாத்தா தன்னுடைய இதயத்தில் தாங்கியே நிற்கிறாரல்லவா! அவரின்பார்வை பனம்பழத்தினை உணராதிருப்பாரை எள்ளி நகையாடுவதாகவும் இருக்கிறதல்லவா ! அதே வேளை பனம் பழம் என்பது எமக்கு வாய்த்த நற்பழம் என்று காட்டி அதனால் செய்யப்படும் பணியாரத்தை சுவைக்கும் படி சொல்லி நிற்பதும் யாவரும் மன திருத்த வேண்டிய கருத்தென லாம்.

தங்கத்தாத்தா பனம்பழத்தையும் அதலிருந்து செய்-யப்படும் பணியாரத்தையும் அழகு தமிழில் காட்டினார். பனங்காப் பணியாரமும் அதன் சுவையும் ஏனைய பணியா ரங்களிலிருந்தும் தனித்துவமானது. அதற்குக் காரணம் பனம்பழத்தில் நிறைந் திருக்கும் களியேயாகும். நன்கு பழுத்த பனம்பழங்கள் ஒன் றையோ அல்லது இரண் டையோ எடுத்து நன்றாகக் கழுவிக் கொள்ளுதல் வேண்டும்.பின்னர் பனம்பழத்தில் மேலிருக்கும் அதன் தோலினை உரித்தெடுத்து விட வேண்டும்.உரித்த பின் னர் பனம்பழத்தை அதன் விதைகளுக்கு ஏற்பப் பிரித்து எடுத்து

(5ஆம் பக்கம் பார்க்க...)

# கற்பகதரு என்னும் அற்புதம்...........

(4ஆம் பக்கத் தொடர்சி...)

ஒரு பாத்திரத்தில் நீரினை நிரப்பி அதில் பிரித்த பனம்பழப் பகுதிகளை வைத்து கையினால் நன்றாகவே கசக்கி அதிலிருக்கும் களி யினை எடுக்க வேண்டும். இப்படி ஒவ்வொருவிதைப்பகுதியையும் நீரில் வைத்து கசக்கி எல்லாக் களியையும் எடுத்துவிடுதல் முக்கியமாகும். இப்பொழுது பனம் பழத்தில் இருந்த களியெல்லாம்நாமெடுத்த பாத்திரத்தில் ஒருவித கூழாகிக் காட்சி தரும்.

மஞ்சள் நிறமாய் மங்கலமாய் அந்தக்களி எம்மைப் பார்த்தபடி இருக்கும். அந்தக் களியினை வடிதட்டு அல்லது நல்ல பருத்தித் துணி கொண்டு வடித்து எடுப்பது அவசியமாகும்.

வடிக்காவிட்டால் பனம்பழக் களியுடன் தும்பு கலந்து விடும். தும்பினை அகற்றாவிட்டால் பணியாரம் செய்வது பொருத்தமாக இருக்கவே மாட்டாது. வடித் தெடுத்த பனங்களியினை வேறு ஒரு பாத்திரத்தில் மாற்றியெடுத்து அதனை அடுப்பில் வைத்து குறிப்பிட்ட அளவுகொதிக்கவைக்கவேண்டும்.

கொதிக்க வைத்த பனங்களியினை சற்று சூடு ஆறுவதற்கு விடுவது அவசியமாகும்.சூடு ஆறிய பனங்களியுடன் கோதுமை மா, அல்லது அரிசி மா, அல்லது , உழுத்தம் மாவினைச் சேர்க்கலாம்.களியுடன் மாவினைச் சேர்க்கும் பொழுது சிறிதளவு சீனியினையும் சேர்க்கலாம். பனங்களியில் இனிப்பு இருந்தாலும் சீனி சேரும் பொழுது இன்னும் ஒருவித சுவை ஏற்படும் என்பதாலும், பனம்பழத்தில் காணப்படும் காறல் சுவை சற்றுத் தணியும் என்பதாலும் சீனியைச் சேர்க்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது. இவை எல்லாவற்றையும் நன்றாகப் பிசைந்து கொள்ளுதல் வேண்டும்.அடுப்பில் பொருத்தமான பொரிக்கும் பாத்திரத்தை வைத்து அதில் எண்ணெய்யினை விட்டு சூடாக வரும்வரை காத்திருந்து, சேர்த்துவைத்திருக்கும்பனங்களியினை கைகளினால் எடுத்து கொதிக்கும் எண்ணெய்யில் சிறிய சிறிய அளவில் போட வேண்டும். நல்ல பொன்னிறமாக வரும் வரை காத்திருந்து இறக்கி ஒரு பாத்திரத்தில் வைக்க வேண்டும்.இப்பொழுது இறக்கி வைக்கப்பட்ட பனங்காப்பணியார த்தின் வாசனை வீடெல்லாம் கம கம என்று வாசத்தைப் பரப்பிய படி இருப் பதை நாங்கள் உணருவோம்.

கோதுமை மா கலந்தால் பனங்காப் பணியாரம் மெதுமையாக இருக்கும். அரிசி மாவோ அல்லது உழுத்தம்மாவோ கலந்தால் சற்று கடினமாய் இருக்கும். இதுதான் இந்தக் கலவைகளினால் ஏற்படும் நிலையாகும். அவரவர் விருப்பத்துக்கு ஏற்றவாறு மாவினைக் கலந்து பணியாரத்தைச் செய்து சுவைத்து மகிழலாம்.

கிழக்கு மாகாணத்தில் பனங்காப் பணியாரங்களைச் செய்து தென்னை ஈர்க்கில் கோர்த்து சந்தைகளில் விற்கிறார்கள். சில வேளை ஈர்க்கில் கோர்க்காமலும் பெட்டிகளில் கொண்டு வந்து சந்தைகளில் விற்பதையும் காணமுடிகிறது.

இக்காட்சியை நான் என்னுடை சிறிய வயதில் கண்டிருக்கிறேன்.சில நேரங்களில் ஈர்க்கில் கோர்த்த பனங்காப் பணியாரங்களை தெரி ஓரங்களில் மர நிழல்களில் இருந்து விற்பதையும் கண்டிருக்கிறேன்.

வாகனங்களில் வருவோர்கள் வாகனங்களை நிறுத்தி அந்தப் பனக்காப் பணியாரங்களை விருப்பதுடன் வாங்கிச் சுவைப்பதையும் பார்த்திருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் பனம் பழக் காலங்களில் வீடுகளில் செய்யும் பனங்காப் பணியாரங்கள்ஓலைப் பெட்டியில் அமர்ந்து புகைவண்டியில் தென்னிலங்கையில் இருக்கின்றவர்கள் சுவைத்திடபயணப்பட்டதும் என் நினைவில் நிற்கிறது. பனங்காப் பணியாரம் என்றால் அவ்வளவு சுவை. அந்தப் பணியாரமானது பனை ஓலைப் பெட்டிகளில்அமரும்பொழுதுஅதன்சுவையோ ஒருதனிச்சுவையாகவேஇருக்கும்.நினைத்துப் பார்த்தால் இன்றும் நாவெல்லாம் நீரூறியபடியே இருக்கிறது.

தென்னையும் பனையும் எங்களின் வாழ்வில் இணைந்தே வருகிறது. தென்னையும் பலவற்றைக் கொடுக்கிறது.

பனையுடன் சரி சமமாக வர ஆசைப்பட்டாலும் அதன் ஆசை அரைகுறையாகவே ஆகிவிடுவதைத்தான் காணமுடி கிறது. தென்னையில் ஒரே இனமே இருக்கிறது, ஆனால் பனை அப்படி அமையவில்லை. பனையில் ஆண் பனை , பெண்பனை என்று வகைப்படுத்தப் பட்டிருக்கிறது. இது பனையில் தனித்துவம் எனலாம். தென்னையிலிருந்து இளநீரை பறிக்கின்றோம், அதுபோல் நுங்கினைப் பார்க்க முடியாது. பெண் பனைகள் மட்டுமே நுங்கினைத் தரும் நிலையிலே இருக்கின்றன.





நுங்குகளை வெட்டி இறக்கிவிட்டால் பின்னர் பனங்காய்களைப் பார்க்கவே முடியாமல் ஆகிவிடும். பனங்காய் பழுத்தால்த்தான் நாம் சுவைப்பதற்கு உரிய பனம் பழத்தினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். பனம்பழம் வந்தால்தால்தான் பனம் விதைவரும். பனம் விதைதான் பின்னர் பனைகளை உருவாக்கும் கருவாக அமைகிறதல்லவா! ஆகவே பனம்பழம் என்பதைப் பெறுவதற்கு பனையில் வருகின்ற நுங்குகளை வெட்டி வீழ்த்தாமல் இருப்பதைக் கவனத்தில் கொள்ளுதல் மிக மிக அவசியமானதேயாகும் என்பதை கருத்திருத்தல் வேண்டும். இதனால் பனம் பழம்பற்றி முழுமையாக அனைவரும் அறிவ தோடு அதனை அகத்தில் இருத்திக் கொள்ளுவதும் மிக மிக அவசியமேயாகும்.


## குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சுகநல விழிப்புணர்வு;க்காக யாழ். நகரில் நடைபவணி

## பல்கலைக்கழக விளையாட்டு அலகு ஏற்பாட்டில்







யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகளை நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு சுகநல மேம்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான நடைபவனி ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. குறித்த நடைபவனி பிறவுண் வீதி, இராமநாதன் வீதி, கே.கே.எஸ் வீதி, வைத்தியசாலை வீதி, பலாலி வீதி ஊடாகச் சென்று பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் விளையாட்டு விஞ்ஞான அலகின் பழைய மாணவர்கள், விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் பங்கேற்றிருந்தனர். (05)

## சர்வதேச மனக்கனித போட்டியில் யாழ்ப்பாணச் சிறுவன் சாதனை



*2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச மனக்கணித போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவரொருவர் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.*

*யுசி மாஸ் திருநெல்வேலி கிளை மற்றும் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த சுதர்சன் அருணன் என்ற மாணவனே ஆறு வயதுக்குட்பட்ட ஏ1 பிரிவு போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.*

*ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் நடைபெற்ற போட்டியில் 80 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.* *(05)*



## நுண்நிதி ....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

இதனால் அவர்களை பிணை நிபந்தனைகளுடன் விடுவிக்க வாய்ப்பு உள்ளது.

காணாமல் போனோர் அலுவலகத்தில் சுமார் 14,000 முறைப்பாடுகள் உள்ளன. இந்த அமைச்சை நாங்கள் பொறுப்பேற்ற போது 62 முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இன்றைய நிலவரப்படி 4795 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. காணாமற்போனோர் அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளையும் அடுத்த வருடத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. நீதித்துறை செயல்முறையை மேலும் வலுப்படுத்தவும் செயற்திறன்மிக்கதாகவும் மாற்றும் வகையில் எட்டு புதிய சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் 'நல்லிணக்க' சங்கத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த 'நல்லிணக்க சங்கத்தில்' அரச அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள். அந்த நல்லிணக்க சங்கங்களின் பணிகள் கிராமத்தில் உள்ள பெரியவர்கள், உயரதிகாரிகள், மதத் தலைவர்கள் ஆகியோரின் பங்களிப்புடனே இடம்பெறும்.

கிராமத்திற்கு வீதி அமைக்கவும், மின்சாரம் வழங்கவும் அரசியல்வாதிகள் தேவை இல்லை. கிராமத்தின் மத விழாக்கள், விளையாட்டு விழாக்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளை கிராம மக்கள் ஏற்பாடு செய்ய முடியும். அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவையும் ஒரே வலையமைப்பாக மாற்றுவதே எமது எதிர்பார்ப்பு. நல்லிணக்க சங்கத்தில் யாரும் தலையிட முடியாது. கிராமத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் இந்த நல்லிணக்கச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று எல்லோரும் நாட்டின் பொருளாதாரம் பற்றி பேசுகிறார்கள். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய பல்வேறு காரணிகள் உள்ளன. யுத்தத்தினால் நாடு இழந்த உயிர்களும் உடமைகளும் அதிகம். அதேபோன்று, நீதிமன்றங்கள், பேருந்துகள் மற்றும் மின்மாற்றிகள் ஜே.வி.பியினால் எரித்து நாசமாக்கப்பட்டன. அவற்றை எரித்து அழிக்காமல் இருந்திருந்தால் இன்று நாட்டின் பொருளாதார நிலை வேறுவிதமாக இருந்திருக்கும்.

நுண்நிதி நிறுவனங்கள் இந்த நாட்டிற்கு பெரிய புற்றுநோயாக மாறியுள்ளன. அவை தொடர்பில் எந்தவித சட்டமோ கண்காணிப்பு முறைகளோ இல்லை. மத்திய வங்கியில் கூட பதிவு செய்யப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களில் கடன்பெறுவது மக்களுக்கு கடினமாக உள்ளது. அவர்களுக்கு பல்வேறு சட்டவிதிகள் உள்ளன. அதனால்தான் பெரும்பாலும் இவ்வாறான நுண்கடன் நிறுவனங்கள் மூலம் மக்கள் கடன் பெறுகிறார்கள். மத்திய வங்கிக்குப் பதிலாக, நுண்கடன் நிறுவனங்களை கண்காணிக்க வென்று தனியான நிறுவனம் ஒன்று நிறுவப்பட வேண்டும். நுண்நிதி நிறுவனங்களில் பாரதூரமான மோசடி கள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. எனவே இவற்றைக் கட்டுப்படுத்த புதிய சட்டங்களைக் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

## பெண்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*றத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரணி விஜயசூரிய கடுமையான கண்டனத்தை வெளியிட்டார்.*




# மட்டு. கொக்குவிலில் சவப்பெட்டியுடன் பெரும் போராட்டம் நடத்திய மக்கள்!



கல்முனையிலுள்ள சிறுவர் நன்னடத்தை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுவனொருவன் பெண் பராமரிப்பாளர் தாக்கியதில் உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு - கொக்குவில் பகுதியை சேர்ந்த 14 வயதான சிறுவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை குறித்த சிறுவனின் பிரேதப்பெட்டியுடன் ஊர்வலமாக வந்த மக்கள் கொக்குவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பிரேதப் பெட்டியை வைத்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது 'பொலிஸார் முறையான பாதுகாப்பு வழங்காதமையே சிறுவன் உயிரிழந்தமைக்குக் காரணம்' என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்திருந்தனர். (05)

## மீன் குஞ்சுகளை விடும் நிகழ்வு கிளிநொச்சியில் முன்னெடுப்பு

உணவுப்பாதுகாப்பு திட்டத்தை மேம்படுத்தும் நோக்குடன் 50000 மீன்குஞ்சுகளை விடும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புது முறிப்பு மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு இவ்வாறு மேலும் 50000 மீன்குஞ்சுகளை விடும் நிகழ்வு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

உணவுப்பாதுகாப்பு மற்றும் போசனையை உறுதி செய்யவும், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் சமூகமட்ட அமைப்புக்களுடன் இணைந்ததான மீன் குஞ்சுகளை வைப்பிலிடும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடந்த மாதம் 19.11.2023ம் திகதி ஆரம்பமானது.

புதுமுறிப்பு மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு 150000 மீன் குஞ்சுகள் விடப்பட்டன. அதற்கு மேலதிகமாக திங்கட்கிழமை மேலும் 50000 மீன்குஞ்சுகள் விடப்பட்டன.

குறித்த நிகழ்வில் தேசிய நீர் வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், மீனவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)





## பல்கலை நினைவுத் தூபி விவகாரம்: மீண்டும் விசாரணைகளுக்கு அழைப்பு!



யாழ். பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் இலசம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பல்கலைக்கழகத்தினுள் அனுமதி பெறப்படாமல் தூபி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், தூபி அமைப்புக்கான நிதி கையாளுகை தொடர்பிலும் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் உட்பட மூவர் கொடுத்த முறைப்பாட்டிற்கு அமையவே குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் சிரேஷ்ட பொருளாளரும், பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர் ஒருவரும், தூபி அமைக்கப்பட்ட வேளையில் இருந்த மாணவர் ஒன்றியத் தலைவரும் திங்கட்கிழமை நண்பகல் 1.00 மணியளவில் குறித்த விசாரணைகளில் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## இந்தியாவிலிருந்து யாழிற்கு நேரடியாக சீனி இறக்குமதி

### அமைச்சர் டக்ளஸ் உத்தரவாதம்

இந்தியாவின் நாகப்பட்டினத்திலிருந்து சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை யாழிற்கு கொண்டுவர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற கூட்டுறவு சங்கங்கங்களின் ஆணையாளர்கள், தலைவர்கள், சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

'280 ரூபாவிற்கு மேற்படாது விற்பனை செய்ய வேண்டும் அதற்கு மேலதிகமாக விற்பனை இடம்பெறாத வகையில் இருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவம் உண்டு. சங்கங்களுக்கு கிடைக்கும் சீனியை மொத்த வியாபாரமாக இடம்பெற்றது. அவ்வாறு இடம்பெறாது இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

தைப்பொங்கலின் பின்னர் நாகப்பட்டினத்திலிருந்து சரக்குகப்பலும் வருவதற்கான பேச்சுக்களும் இடம்பெறுகிறது.

பயணிகள் கப்பலுடன் சரக்கு கப்பலும் வரும். அதன் போது சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகளிலும், தட்டுப்பாட்டிலும் மாற்றம் ஏற்படும்.

தைப்பொங்கலுடன் சரக்கு கப்பலும் வரும். இதுவரை காலி, கொழும்பு பகுதியில் பொருள்கள் இறக்கப்பட்டு இங்கு கொண்டு வரும்போது அதிக செலவு ஏற்படும்.

தற்போது, யாழ்ப்பாணத்திற்கு சரக்கு கப்பல் வந்தால் செலவு குறைந்து விலையில் மாற்றப்படும். அவை கூட்டுறவு சங்கங்கள் ஊடாகவே மக்களிடம் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. – எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (05)

## பழம்பெரும் நடிகர் 'சிறிசேன' காலமானார்

இலங்கையைச் சேர்ந்த பிரபல மூத்த நடிகரான 'சுமிந்த சிறிசேன' தனது 75 ஆவது வயதில் திங் கட்கிழமை காலமானார்.

கம்பஹாவில் உள்ள தனியார் வைத்திய சாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (05)

## புதிய நிர்வாகம் தெரிவு

தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நடைபெற்றது.

தலைவராக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.தேவநேசனும் செயலாளராக ஊடகவியலாளர் லயன் சி.ஹரிகரனும் பொருளாளராக தாதிய உத்தியோகத்தர் த.ரதீசனும் உபதலைவராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதல்வர் தி.வரதனும், உப செயலாளராக தாதிய பரிபாலகி செல்வி துரைசாமி திலகவதியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுமக்கள் தரப்பிலிருந்து 8 நிர்வாகசபை உறுப்பினர்களும் வைத்தியசாலைத் தரப்பிலிருந்து 5 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (05)

## அரசியல்வாதிகள் பொதுப் போக்குவரத்தை பாவிக்கும் கலாசாரத்தை உருவாக்குவோம்

### அநுர திடசங்கற்பம்

பஸ், ரயில் என அரசியல்வாதிகள் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் புதிய அரசியல் கலாசாரத்தை தேசிய மக்கள் சக்தி உருவாக்கும் என அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கேகாலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், தனிப்பட்ட பாதுகாப்புக்காக தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எவரும் பொலிஸாரைப் பயன்படுத்தியதில்லை எனக் கூறியுள்ளார். வேறு நாடுகளில் உள்ள அரசியல்வாதிகள் பஸ், ரயில், சைக்கிள் என மக்களுடன் இணைந்தே செல்கின்றனர் எனவும் அந்த கலாசாரம் இங்கு வர வேண்டும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் வங்குரோத்து அடைந்த நாட்டை பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்யும் துணிவு தேசிய மக்கள் சக்திக்கு உள்ளது என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்நாட்டிலும் ஏனைய நாடுகளில் வாழும் இலங்கையர்களின் அறிவைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை மீட்டெடுப்போம் என்றும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (05)

## தமிழருக்கு எதிரான காட்டுச் சட்டங்களை அகற்றவேண்டும் என்கிறார் கஜேந்திரன்

தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை மறுப்பதும் தமிழ் மக்களுக்கு எதிராக காட்டுச் சட்டங்களைபயன்படுத்துவதும் நிறுத்தப்படவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் – தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை மறுப்பதும் தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டுச் சட்டங்களைப் பயன்படுத்துவதும் தமிழர்கள் மீது ஈவிரக்கம் இல்லாத தாக்குதல்கள் சித்திரவதைகளை நடத்துவதும் பொலிஸின் வழமையான நடவடிக்கையாக இருக்கின்றது.

ஆகவே, பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம். யுத்தகாலத்திலேயே இனப்படுகொலையோடு சேர்ந்து செயற்பட்ட பங்காளர்களான பொலிஸாரின் வடக்கு, கிழக்கிலே பல உயர் பதவிகளில் இருக்கின்றனர். அவர்களுக்குக் கீழே செயல்படுகின்றவர்களும் புதிதாகச் சேர்ந்து கொள்பவர்களும் அது தமிழர்களாக இருந்தாலும் கூட அவர்களுடைய மேலதிகாரிகளின் மனநிலைக்கு உள்வாங்கப்பட்டு சாதாரண தமிழ் மக்களை மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்கின்ற வக்கிர மனம் கொண்டவர்களாக மாற்றப்படுகிறார்கள்.

ஆகவே, இந்த முறைமை முற்றாக மாற்றப்பட வேண்டுமாக இருந்தால் எங்கள் மீது நடைபெற்ற இனப்படுகொலைக்கு முழுமையான சர்வதேச விசாரணையொன்று நடைபெற வேண்டும்.

இராணுவத்தினர் மட்டுமல்லர், இந்த இனப்படுகொலையோடு தொடர்புபட்ட பொலிஸாரும் தண்டிக்கப்படுகின்ற பொழுதுதான் பொலிஸாரும் மனிதர்களை நேசிக்கின்ற ஒரு சூழல் உருவாகும். – என அவர் மேலும் தெரிவித்தார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவானதாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# தன்னைக் கொல்லவந்த ஐவரையும் மன்னிக்க சுமந்திரன் எம்.பி. தயாரா?

## விஜயதாஸ கேள்வி

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்ப்பவராயின் அவரை கொலை செய்ய வந்த ஐந்து இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு அவர் கூற வேண்டும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன் நீதி அமைச்சர் தொடர்பில் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றில் முன்வைத்த குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'நான் இந்த நாட்டின் நீதி அமைச்சராக இருப்பதற்கு வெட்கப்பட வேண்டும் என்று சுமந்திரன் கூறுகின்றார்.

மட்டக்களப்பிலுள்ள விகாராதிபதி தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுகின்றார்நான்என்னசெய்தேன் என்று கேட்கிறார்.

அவ்வாறான ஒருவரை கைது செய்ய நீதி அமைச்சருக்கு அதிகாரம் இருக்கின்றதா என நான் அவரிடம் கேட்டேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்யுமாறு தமிழ் டயஸ்போராக்கள் ஒப்பந்தம் ஒன்றை வழங்கியிருந்தார்கள். குறித்த ஒப்பந்தம் 20 லட்சம் ரூபாய்கு செய்யப்பட்டது. வடக்கிலுள்ள ஐந்து இளைஞர்கள் அவரை கொலை செய்ய சென்ற போது எமது இராணுவமும் புலனாய்வு பிரிவும் சிறந்த முறையில் செயற்ப்பட்டதன் காரணமாக அந்தக் கொலையைத் தவிர்க்க முடிந்தது.

அவரை காப்பாற்றிய பின்னர் அவரை கொலை செய்வதற்கு வந்த குறித்த 5 பேர் மீதும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவரைக் கொலை செய்ய வருபவர்களுக்கு மாத்திரம் பயங்கவாத தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால்மற்றவர்களைகொலை செய்த கொலையாளிகளைப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்க வேண்டாம் என்று கூறுகின்றார்.

சுமந்திரன்அவர்களேநீங்கள்பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்ப்பவர் என்றால் உங்களை கொலை செய்ய வந்த ஐவரையும் விடுதலை செய்யுமாறு நீங்களே கூறுங்கள். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)



# 10 பேர்ச் காணித் திட்டம்: அவிசாவளையில் தேவை

## மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை

'ஜனாதிபதி ரணிலின் 10 பேர்ச் வீட்டுக்காணித்திட்டம்அவிசாவளையில் ஆரம்பிக்கப்பட வேண்டும்' என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட அவிசாவளை தொகுதி பென்ரித் தோட்டம் கருங்காளி பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தின் சேதங்களைப் பார்வையிடச் சென்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இங்கேஇடம்பெற்றுள்ளதீவிபத்தில் எட்டு வீடுகள் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதோடு , 4 வீடுகள் சிறிய அளவில் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

இங்கே ஏறக்குறைய இருபது குடும்பங்கள் வாழ்கின்றன என அறிகின்றேன். இந்த இருபது குடும்பங்களுக்கும் வீடுகளை கட்டிக்கொள்ள தலா பத்து (10) பேர்ச் காணித் துண்டுகள் வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனதுபட்ஜெட்உரையில்பெருந்தோட்ட குடும்பங்களுக்கு வீடமைக்க காணி வழங்குவேன் எனக்கூறி, அதற்காக நானூறு கோடி ரூபாவைத் தனது அமைச்சின் நேரடி கண்காணிப்பில் ஒதுக்கிக்கொண்டுள்ளார்.

ஆகவேஎனதுஇந்தகோரிக்கையை ஏற்றுக்கொண்டுதனதுவாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். - இவ்வாறு மனோ கணேசன் கூறியுள்ளார்.(05)

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் 125 பேர் வீடு செல்வேண்டும்

## ரொஷான் ரணசிங்க எதிர்வுகூறல்

சிங்கம் போன்று சரியானதை சரி என்றும் பிழையை பிழை என்றும் கூறும் ஒரு தரப்பினரே இந்த நாடாளுமன்றத்திற்கு வர வேண்டும் என்றும் தற்போதுள்ள 225 பேரில் 125 பேர் வீட்டுக்கு செல்வார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

குடியகல்வுத் திணைக்களம் ஊடாகஅனைத்துதிருடர்களையும் நாங்கள் பிடித்தோம். இந்தத் திணைக்களத்தையேவலுப்படுத்த வேண்டும்.

குடியகவல்வு திணைக்களத்திற்குஅதிகாரம்வழங்கவேண்டும். வழக்கு தொடரவும், தண்டனை வழங்கவும் பதவி நீக்கம் செய்யவும் குடியகல்வு திணைக்களத்திற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

விளையாட்டு துறையில் காணப்படும் மோசடிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுமாறு 2018 ஆம் ஆண்லிருந்து நீதி அமைச்சுக்கு முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஆனால் எந்தவித முறைப்பாட்டிற்கும் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. ஊழல் மோசடிகள் எதுவும் நிறுத்தப்படவில்லை. அனைத்தும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

அதேநேரம் இந்த நாட்டின் வங்குரோத்து நிலைக்கு நிதி அமைச்சும் பொறுப்புக் கூற வேண்டும்.

தான் சம்பாதித்தவைகளை நாட்டுக்கு கொடுக்கும் அரசியல் வாதி மற்றும் திரைசேரியை வீட்டுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அரசியல்வாதியே இந்த நாட்டுக்குத் வேண்டும்.

சிங்கம் போன்று சரியானதை சரி என்றும் பிழையை பிழை என்றும் கூறும் ஒரு தரப்பினரே இந்த நாடாளுமன்றத்திற்கு வர வேண்டும்.

இந்த 225 பேரில் 125 பேர் வீட்டுக்குசெல்வார்கள். -எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# மாத்தறை நீதிவான் நீதிமன்றில் திருடிய ஐந்து பேர் கைதாகினர்

மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் திருடிய குற்றச் சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் மற்றும் துப்பாக்கிகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருடப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி 280,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றைய இரு சந்தேகநபர்களும் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(05)

# 15 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய விளையாட்டுப் பேரவை

கலாநிதி மையா குணசேகர தலைமையில் 15 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய விளையாட்டுப் பேரவையை விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நியமித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க இதன் தலைவராக முன்னர் பதவி வகித்திருந்தார்.

இந்நிலையில்புதிதாகநியமிக்கப்பட்ட குறித்த தேசிய விளையாட்டுப் பேரவையில், செயலாளராக ஐ.யு. விக்கிரமசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீயானி குலவன்ச, ராஜித அம்பேமொஹொட்டி, பேராசிரியர் அர்ஜுன டி சில்வா, பாண்டுக கீர்த்தினத, ஜி.ஜி.புஞ்சிஹேவா, மாலிக் காதர், எஸ்.வி.டி. நாணயக்கார, ஹபீஸ் மர்சோ, சிதாத் வெட்டிமுனி, ஜகத் ஜயசூரிய, அனுராதா இல்லபெரும, மெல்பெர்னாண்டோ, கமல்தேசப்பிரிய ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, தேசிய விளையாட்டுத் தேர்வுக் குழுவையும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ நியமித்துள்ளார்.

ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில், அர்ஜுன் ரிய பெர்னாண்டோ, மாயா குண சேகர, சுரேஷ் சுப்ரமணியம், நளிந்த சம்பத் இளங்ககோன் ஆகியோர் உறுப்பினர்களாக நிய மிக்கப்பட்டுள்ளனர். (05)



# திருமலையில் காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம்

திருகோணமலை,வெல்கம் விகாரை வனப்பகுதியில் பெருமளவிலான காணிகள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்து அப்பகுதி மக்கள் கடந்த 5 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

எவ்வாறு இருப்பினும் இதுவரை எந்த ஓர் அரச அதிகாரிகளும் இது தொடர்பில்கவனம்செலுத்தாதநிலையில் திருகோணமலை - அனுராதபுரம் பிரதான வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த உப்புவெளி பொலிஸார் இவ்விடயம்தொடர்பாகசம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துரையாடுவதற்கு உதவி செய்வதாக உறுதியளித்ததை அடுத்து அவ்வீதியூடான போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அப்பகுதி மக்களால் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05)

# ஏற்றுமதி வீழ்ச்சி

2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபரில் இலங்கையின் ஏற்றுமதி 14.6 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெறுமதியின் அடிப்படையில் 898.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், செப்ரெம்பர் 2023 இல் பதிவு செய்யப்பட்ட மதிப்புடன் ஒப்பிடும் போது இது 13.13 வீதம் குறைவு எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஆடை, ரப்பர், சார்ந்த பொருள்கள், தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த பொருள்களில் ஏற்றுமதி தேவை குறைவதால் பொருள்களின் ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உணவு மற்றும் பானங்களின் ஏற்றுமதி வருவாய் 2023 ஒக்ரோபரில் 20.77 வீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

2022 ஒக்ரோபருடன் ஒப்பிடுகையில், 2023 ஒக்ரோபரில்கடல்உணவுகளின்ஏற்றுமதிவருவாய் 3.73 வீதம் அதிகரித்து 20.29 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

மேலும், அலங்கார மீன்களின் ஏற்றுமதி வருமானம் ஒக்ரோபர் 2022 உடன் ஒப்பிடும்போது 2023 ஒக்ரோபரில் 35.71வீதம் அதிகரித்து 2.47 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(05)



# மன்னார் பிரீமியரில் வெற்றிவாகை சூடியது அயிலன் எவ்.சி. அணி

மன்னார் பிரீமியர் லீக் தொடரின் போட்டி ஞாயிற்றுக்கிழமை மாலை - மன்னார் பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

ஏ.கே.ஆர்.எவ்.சி. அணிக்கும் அயிலன் எவ்.சி. அணிக்கும் இடையே இடம்பெற்ற இப்போட்டியில் அயிலன் எவ்.சி. அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது.

முதல் நிலையை பெற்றுக்கொண்ட அணிக்கு 10 லட்சம் ரூபாவும், 2 ஆவது இடத்தை பெற்றுக் கொண்ட அணிக்கு 5 லட்சம் ரூபாவும் பணப் பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கான நிதி அனுசரணையை சிறி சபா ரத்தினம் அறக்கட்டளை வழங்கியது.

இந்தப் போட்டியில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன், அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லஸ் மற்றும் அருட்தந்தையர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
NCI
CCIY
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILEZone
CCH
IDEA FACTORY
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர்
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்